விரைவு அஞ்சல்

**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600 025**

--- x ---

**செயல்முறை எண்: 21496 / ஏ2 / 06, நாள். 30 .5 . 2008**

பொருள்: தொழில்நுட்பக் கல்வி – அரசு பொறியியற் கல்லூரிகள் – ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டவர் விரிவுரையாளராக நியமிக்கப்படல் – பணியிடம் வழங்குதல் – குறித்து.

பார்வை: 1) சென்னை / ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் கடித எண் 1398/அ4/07, நாள். 12.4.2008.,
2) அரசு / உயர்கல்வித் துறை, கடித எண் 714 / ஜ1 / 2008, நாள் 21.5.2008.

–0–

**ஆணை:**

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு, அரசு பொறியியற் கல்லூரிகளில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ள இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு அவர் பெயருக்கெதிராக கண்டுள்ள கல்லூரியில் பணியிடம் அளித்து ஆணை வழங்கப்படுகிறது.

2. விரிவுரையாளர் பதவிக்கான ஊதிய விகிதமான ரூ.8000–275–13500 மற்றும் இதர படிகளுடன் ஊதியம் பெற இவர் தகுதியுடையவராவார்.

3. இவருடைய சான்றிதழ்களின் உண்மைத்தன்மைக்குட்பட்டே இவருக்கு பணி வரன்முறைப்படுத்தப்படும். சான்றிதழ்களில் ஏதேனும் குறை கண்டறியப்படின் எந்த நேரத்திலும் இவர் பணிநீக்கம் செய்யப்படுவார். தமிழ் நாடு அரசில் பணிபுரியும் சிவில் சர்ஜன் நிலைக்குக் குறையாத அலுவலர் அல்லது அரசு மருத்துவ மனை / நிறுவனங்களில் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட மதிப்புறு சிவில் சர்ஜன் / மருத்துவர் (Physician) ஆகியோரிடமிருந்து உரிய படிவத்தில் (நகல் இணைக்கப்பட்டுள்ளது) உடற் தகுதிச் சான்று பெற்றளித்த பின்பே இவர் பணியில் சேர இயலும். உடல் ஊனமுற்றவராயின் அரசாணை (நிலை) எண் 733, சமூக நலத் துறை, நாள் 9.10.1980ன்படி வேலை வாய்ப்பக அலுவலகத்துடன் இணைவு பெற்ற மருத்துவக் குழுவின் தகுதிச் சான்றிதழ் பெற்றாக வேண்டும்.

4. பணியில் சேரும் விரிவுரையாளரின் பணியிட மாற்ற வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. தமிழ் மொழி தேர்ச்சி பெறவேண்டியிருப்பின் இவர் இரண்டாண்டுகளுக்குள் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

..2

6.பணியிடம் வழங்கப்பட்டுள்ள கல்லூரியில் பணியில் சேரும்போது கீழ்க்கண்ட சான்றிதழ்களை சரிபார்க்கும் பொருட்டு அசலாக (original certificates) சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரிடம் ஒப்படைத்திடவேண்டும்:

(1) பள்ளியிறுதிச் சான்றிதழ் / அதற்கு நிகரான சான்றிதழ்
(2) பிறந்த நாள் குறித்த சான்றிதழ்
(3) பட்டப் படிப்பு / பட்ட மேற்படிப்பிற்கான சான்றிதழ்
(4) நன்னடத்தைச் சான்றிதழ்
(5) சாதிச் சான்றிதழ்
(6) முன் பணி அனுபவமிருப்பின் அதற்கு ஆதாரமான பணிச் சான்றிதழ்
(7) உடற் தகுதிச் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட அசல் சான்றிதழ்களுடன், அவற்றின் ஒளிப்பட நகல்கள் மூன்றும் சான்றொப்பம் பெற்று ஒப்படைக்கப்பட வேண்டும்.

7. இவருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட மாட்டாது. எனினும், அரசாணை எண்: 259 (நிதித் துறை) நாள் 6.8.2003ன்படி பங்குத் தொகை செலுத்தும் ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) சேர்க்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் பங்குத் தொகைச் சந்தா மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

8. பணியில் சேரும் தருணத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட்டு சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வரிடம் நேரில் சமர்ப்பிக்க வேண்டும்.

9. இவர், 15.06.2008க்குள் பணியில் சேரவேண்டும். பணியில் சேர்வதற்கான பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

10. இவ்வாணை கிடைக்கப் பெற்றமைக்கான ஒப்புகையினை அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளலாகிறது.

இணைப்பு: (1) உடற் தகுதிச் சான்றிதழ் படிவம்
(2) உறுதிமொழிப் படிவம்

(ஒம்) இரா.சிவகுமார்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

பெறுநர்
சார்ந்த விரிவுரையாளர்

நகல்: அரசுச் செயலாளர், உயர் கல்வித் துறை, சென்னை 600 009.
உறுப்பினர்–செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 600 006.
முதல்வர், அரசு பொறியியற் கல்லூரி, தடாகம் சாலை
கோயமுத்தூர் – 641 013
மாவட்ட கருவூல அலுவலர், தடாகம் சாலை
கோயமுத்தூர் – 641 013
ஆணையரின் மேசைக்கு
உதவி இயக்குநர் (நிர்வாகம்)
முதன்மை ஆணைக் கோப்பு

2-6-08

தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்காக

02/6/08

## இணைப்பு

## அரசு பொறியியற் கல்லூரிகள்

**R – 05** ( Bio-Engineering )

| வரிசை எண் | பதிவெண் | விரிவுரையாளராக நியமிக்கப்படுபவரின் பெயர் மற்றும் முகவரி | பணியிடம் வழங்கப்படும் அரசு பொறியியற் கல்லூரி |
|---|---|---|---|
| 1 | R05100001 | திருமதி. ஆர். ஷர்மிள் சுகன்யா,<br>3/627, III வது கிராஸ், ராயல் அவின்யு,<br>விஜிபி நகர் எக்ஸ்டன்ஷன்,<br>மேட்டுக்குப்பம்,<br>துரைப்பாக்கம் போஸ்ட்,<br>சென்னை – 600 096. | அரசு பொறியியற் கல்லூரி<br>தடாகம் சாலை<br>கோயமுத்தூர் – 641 013 |

(ஒம்) இரா.சிவகுமார்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர்

தொழில்நுட்பக் கல்வி ஆணையருக்காக